**O.S. No. 235 /2019**
**Date: 21.1.2026**
**வா.சா.1 செல்லையா தேவர்**
**பிரதி வாதி தரப்பு குறுக்கு விசாரணை**

தற்போது எனக்கு வயது 72. நான் இந்த வழக்கில் என்ன பரிகாரம் கேட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் பிரதிவாதி தனக்கு 2 ஏக்கர் நிலம் உள்ளதாக சொல்லி எனது சொத்தில் இடையூறு செய்தார். தாவா சொத்தின் சர்வே எண் எனக்கு தெரியாது. திருவேங்கடம் வட்டம், கலிங்கப்பட்டி கிராமம் புல எண்.759 ல் 3 ஏக்கர், 2.80 செண்டு, கீழ்பக்கம் 1 ஏக்கர் 32 செண்டு , மற்றும் புல எண்.760 ஏக்கர் 2, 60 செண்ட் மற்றும் புல எண். 761 ல் 1 ஏக்கர் 34 செண்டின் மேற்புறம் 94 செண்டு ஆக மொத்தம் 4 ஏக்கர் 85 செண்டு சேர்ந்தரணையாக உள்ளது என்பது உண்மையில்லை என்றால் சரியல்ல. 4 ஏக்கர் 85 செண்டில் உள்ள 2 ஏக்கல் நிலத்தை வடபுறம் சீனித்தேவர் குமாரர் கோபால் தேவர் மற்றும் அவரது மனைவியான ராமு அம்மாள் என்பவரிடம் இருந்து 21.04.1986 ம் தேதியில் ரூ.6,400/-க்கு கிரையம் பெற்றதாக சொல்வது உண்மையில்லை என்றால் சரியல்ல. கிரையம் பெற்ற வருடம் எனக்கு ஞாபகம் இல்லை. அதில் யார் சாட்சி கையொப்பம் செய்தார்கள் என்ற விவரமும் தெரியாது. வா.சா.ஆ-1 ஆவணம் எங்கு வைத்து எழுதப்பட்டது என்றால் திருவேங்கடத்தில் வைத்து எழுதப்பட்டது. இதில் எத்தனை அயிட்டம் காட்டப்பட்டுள்ளது என்ற விவரம் தெரியுமா என்றால் தெரியாது. மொத்தம் எத்தனை ஏக்கர் வாங்கினோம் என்றால் 5 ஏக்கர் வாங்கினோம். பிரதிவாதியின் தந்தை கருப்பசாமியின் அப்பா பெயர் தெரியுமா என்றால் ஞாபகம் இல்லை. இந்த வழக்கு தாக்கல் செய்ய விவரம் சொன்னது யார் என்றால் நான் தான் விவரம் கூறினேன். பிராதை யாராவது படித்து காட்டினார்களா என்றால் இல்லை. பிராதில் உள்ள கையொப்பம் எதுக்காக போட்டேன் என்று எனக்கு தெரியாது. வா.சா.ஆ.2 கிரைய ஆவணத்தை கோபால் தேவர், ராமு அம்மாள் ஆகியோர்களிடமிருந்து எந்த தேதியில் கிரையம் பெற்றேன் என்றால்தெரியாது. வா.சா.ஆ.2 கிரைய ஆவணத்தின் படி எவ்வளவு விஸ்தீரணம் என்றால் 4 ஏக்கர் 85 செண்டு. என் இடத்திற்கு மேற்கே சாத்தப்ப தேவர் இடம் உள்ளது. என் இடத்திற்கு கிழக்கே முனியராஜ் என்பவரின் இடம் உள்ளது. என் இடத்திற்கு வடக்கே சத்திய தேவர் என்பவரின் இடம் உள்ளது. என் இடத்திற்கு தெற்கே வெள்ளச்சாமி தேவர் என்பவரின் இடம் உள்ளது. கோபால் தேவர்,

ராமு அம்மாள் ஆகியோர்கள் மாரிச்சாமிக்கு எழுதிக் கொடுத்த கிரைய ஆவணத்திற்கான சான்றிட்ட நகலினை வா.சா.ஆ .3 ஆக தாக்கல் செய்துள்ளேன். மேற்படி ஆவணங்களை பிரதிவாதியை மோசடி செய்யும் நோக்கத்துடன் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. 06.04.2017 ம் தேதியிட்டு முத்தையா தேவர் குமாரர் செல்லையா தேவருக்கு அவருடைய சகோதரர் முத்தையா தேவர் குமாரர் மாரிச்சாமி என்பவர் ஒரு செட்டில்மெண்ட் ஆவணம் எழுதிக் கொடுத்ததாக சொல்லி மோசடியாக ஆவணத்தை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. வா.சா.ஆ.5 ஆவணத்தின்படி 08.11.2009 ம் தேதியிட்டு பிரதிவாதி சுப்புத்தாய் என்பவரிடமிருந்து கிரையம் பெற்ற விவரம் தெரியுமா என்றால் தெரியாது. தாவா சொத்துக்களுக்கு எத்தனை பட்டா எண்கள் உள்ளது என்ற விவரம் தெரியுமா என்றால் 4 பட்டா எண்கள் உள்ளது. தாவா சொத்து தென்காசி மாவட்டம் , கலிங்கப்பட்டி கிராமம் பகுதி 1 புஞ்சை புல எண். 760 ல் ஏக்கர் 2, செண்டு 61 பட்டா எண்.356 ஆதியில் பிரதிவாதியின் தகப்பனாரின் தந்தையின் தந்தை ஆறுமுகத் தேவருக்கு பாத்தியப்பட்டு அவருடைய ஆளுகையில் இருந்து வந்தது என்றாலும், அவருடைய காலத்திற்கு பின்பு வில்லங்க விவகாரங்கள் ஏற்படாமல் இருக்கும் பொருட்டு புஞ்சை புல எண். 760 ஏக்கர் 2, செண்டு 61 ஐ பொறுத்து அவருடைய வாரிசுதாரர்களாகிய 1.மைனர் குருசாமி தேவர் (பிரதிவாதியின் தந்தையின் தந்தை) 2.வீருத் தேவர், 3. சாத்துாரப்ப தேவர் 4.மலையாண்டித் தேவர், 5.சுப்பையா தேவர், ஆகியோர்களுக்கு இடையே கரிவலம் வந்த நல்லூர் சார்பதிவாளர் என்பவரின் ஆவண எண். 403 / 1929 ன் படி பாகப் பிரிவினை செய்துக் கொண்டதன் அடிப்படைடியில் வழக்கு தாவா சொத்தின் ஒரு பகுதியாக சொத்தின் புல எண். 760 ல் ஏக்கர் 2, செண்டு 61 பிரதிவாதி தகப்பனாரின் தந்தை குருசாமி தேவருக்கு பாத்தியப்பட்டு அனுபவம் செய்து வந்தார் என்றாலும், பின்னர் அவரது காலத்திற்கு பின்பு பிரதிவாதியின் தகப்பனாரின் உடன் பிறந்தோர்களுக்கிடையே ஏற்பட்ட வாய்மொழி பாகப் பாத்தியத்தின் மூலம் புல எண். 760 ஏக்கர் 2, செண்டு 61 பிரதிவாதி தந்தை குருசாமி என்பவர் ஆண்டு அனுபவம் செய்து வந்தார் என்றாலும், பிரதிவாதியின் தந்தையின் காலத்திற்கு அப்பால் வாய்மொழி பாகப் பிரிவினையின் மூலம் பிரதிவாதிக்கு பாத்தியப்பட்டு நாளதுதேதி வரை பிரதிவாதி அனுபவம் செய்து வருகிறார் என்றாலும், கோபால் தேவர் இறந்து சுமார் 35 வருடம் ஆகிறது என்றாலும், அவருடைய காலத்திற்கு பின்பு நான் எந்த காலத்திலும்

தாவா சொத்தை அனுபவம் செய்தது இல்லை என்றாலும் சரியல்ல. என்னுடைய அனுபவத்தைக் காட்டக்கூடிய வகையில் VAO விடம் இருந்தோ, வருவாய் துறையினரிடமிருந்தோ அடங்கல் உள்ளிட்ட எந்த வருவாய் துறை ஆவணத்தையும் பெற்றுக் கொண்டதில்லை என்றால் சரியல்ல. நான் கோபால் தேவர் மற்றும் அவரது மனைவி ராமு அம்மாள் என்பவர்களிடமிருந்து சொத்தை வாங்காமல் ஆள் மாறாட்டம் செய்து தப்பும் தவறுமான மால்கள் மற்றும் விஸ்தீரணம் காட்டி, மோசடியான ஆவணங்களை உற்பத்தி செய்து நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. தாவா சொத்திற்கும் நான் தாக்கல் செய்துள்ள ஆவணத்திற்கும் எந்த தொடர்பும் இல்லை என்றால் சரியல்ல. நான் கோரியுள்ள பரிகாரங்கள் கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. பிரதிவாதியின் செலவுத் தொகையுடன் வழக்கு தள்ளுபடி செய்யக்கூடியது என்றால் சரியல்ல.

குறுக்கு விசாரணையின் தொடர்ச்சிக்காக ஒத்திவைக்கப்படுகிறது.

(Sd/–P.Mahindra Varma)
Subordinate Judge,
Sankarankovil.